Kanton Zürich
Bildungsdirektion
Volksschulamt
Pädagogisches, Lehrplan 21

Kontakt: Projekt Lehrplan 21, Projektleitung, Walchestrasse 21, 8090 Zürich
Telefon 043 259 22 99, lehrplan21@vsa.zh.ch

**Tamilisch**

# மழலையர் பள்ளி (கிண்டர்கார்டன்) மற்றும் ஆரம்ப பாடசாலைகளின் முதலாம், இரண்டாம் வகுப்புகளின் பெற்றோர் கலந்துரையாடல் மற்றும் சான்றிதல்கள் (ரிப்போர்ட்) பற்றிய விபரங்கள் (சுழற்சி 2)

**பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கான தகவல்கள்**

## கற்பித்தல், படிப்பது மற்றும் மதிப்பீடுபற்றிய விபரங்கள்

பள்ளியின் முதல் ஆண்டுகளின் பாடங்கள் குழந்தைகளின் வளர்ச்சிக்கு வலுசேர்க்கும்விதமாக அமையும். இதில் விளையாட்டு பாடத்திட்டத்தின் ஒரு மிக முக்கியமான பகுதியா அமையும். மழலையர் பள்ளி மற்றும் ஆரம்ப பள்ளியின் முதலாம் வகுப்பிலும் ஏனைய பாடங்கள் படிப்படியாக பாடத்திட்டத்தின்படி இணைக்கப்படும்.

கற்பித்தல், படிப்பது மற்றும் படிப்பின் முன்னேற்றத்தை கணிப்பிடுவதும் ஒரு வெற்றிகரமான கல்வியை பகிருவதின் அடிப்படையாகும். மேலும் பாடத்திட்டமும் கற்பிக்க உதவும் சாதனங்களும் பாடங்களை கற்பிக்க துணைபுரியும். இதன் அடிப்படையில் ஆசிரியர்கள் விளையாட்டையும் மற்றும் முறையான பாடங்களையும் இணைத்து கல்வியை கற்பிக்கிறார்கள்.

ஆசிரியர்கள்பல்வேறு வழிகளில் மாணவர்களின் திறமைகளை வளர்க்க அவர்களை ஊக்குவிக்கிறார்கள். அவர்கள் மாணவர்கள் பாடங்களை படிப்பதற்கு துணைபுரிவார்கள். மாணவர்களின் படிப்பு நிலைமை தொடர்பான விபரங்களை தெரிவிப்பார்கள் மற்றும் மாணவர்கள்களின் செயல்திறன் மற்றும் நடத்தை பற்றிய விபரங்களையும் தெரிவிப்பார்கள். அவர்களின் கருத்துக்கள் குழந்தையின் திறைமை விபரிக்கும்படியம் மற்றும் குழந்தைகளை ஊக்குவிக்கும் விதமாகவும் இருக்கும். அதே நேரத்தில் அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் மாணவர்களின் படிப்பின் முனேற்றத்துக்கு உறுதுணையாகயிருக்கும். மேலும் அவ்வப்போது மாணவர்கள் கற்றல் இலக்குகளை அடைந்திருக்கிறார்களா என்று கண்கணிப்பார்கள். உதாரணமாக விளையாட்டு செயல்முறைகள், படிப்பு முன்னேற்றம் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடல்கள் இந்த கண்காணிப்பில் அடங்கும்.

## பெற்றோர் கலந்துரையாடல்  மற்றும் மதிப்பீடு (ரிப்போர்ட்)

மழலையர் பள்ளி மற்றும் 1 ஆம் வகுப்பில் சான்றிதழ்கள் (ரிப்போர்ட்) வழங்கபடுப்பதில்லை. இரண்டாம் வகுப்புபிலிருந்து மாணவர்களுக்கு சான்றிதழ்கள்  மதிப்பெண்களுடன் (ரிப்போர்ட்) வழங்கப்படும்..

## மழலையர் பள்ளி மற்றும் முதலாம் வகுப்பு

மழலையர் பள்ளி மற்றும் ஆரம்ப பள்ளியில் பெற்றோருடன் அல்லது பாதுகாவலர்களுடன் இரண்டு ஆலோசனை சந்திப்புக்கள் நடத்தப்படும் (வழக்கமாக ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ). அங்கு படிப்பு நிலைமை மற்றும் குழந்தையின் முன்னேற்றம் விவாதிக்கப்படும். இந்த ஆலோசனைகளுக்கான திகதியை ஆசிரியர் தீர்மானிப்பார். இந்த சந்திப்புக்கள்பெற்றோரின் மற்றும் ஆசிரியரின் பார்வையில்  தேவைப்படும் சமயத்தில் நடைபெறும்.

மழலையர் பள்ளி மட்டத்தில், ஆசிரியர் சம்மதித்தால் பெற்றோர் இரண்டாவது சந்திப்பை தவிர்க்கலாம்.

சந்திப்புக்களை பதிவு செய்வதற்கு ஒரு படிவம்  உள்ளது. பெற்றோர்கள் இந்த படிவத்தில் அவர்களின் கையொப்பத்துடன் நடைபெற்ற சந்திப்புக்களையும் மற்றும் இரண்டாவது சந்திப்பு நடைபெறாத பட்ச்சத்தில் அதையும் உறுதிப்படுத்தலாம். இந்த படிவங்கள் ஒரு கோப்புறையில் (பைலில்) பராமரிக்கப்படும். இந்த  படிவங்கள் மழலையர் பள்ளி இறுதியில் அல்லது 1 வது வகுப்பு இறுதியில் பெற்றோர்களிடம்  ஒப்படைக்கப்படும். கட்டாய பாடசாலை வருகைக்கான ஆதாரமாக இந்த படிவங்களின் நகல்கள் (கொப்பி) பள்ளி நிர்வாகத்தில் பாதுகாக்கப்படும்.

## இரண்டாம் ஆண்டு

ஆசிரியர்கள் இரண்டாம் ஆண்டில்   ஜனவரி இறுதியிலும்   மற்றும் இரண்டாம் வகுப்பின் முடிவிலும் மதிப்பெண்கள் அடங்கிய சான்றிதழ்களை வழங்குவார்கள். இந்த மதிப்பெண்கள் வகுப்பில் படிப்பிக்கும் போது நடைபெறும் கண்காணிப்புகளுக்கு அமைவாகவிருக்கும். இரண்டாம் வகுப்பில் ஜேர்மன் மற்றும் கணித பாடத்துக்கு மதிப்பெண்கள் வழங்கப்படும். ஜேர்மன் மொழியை

விளங்குவது, வாசிப்பது, பேசும் மற்றும் எழுதுவதும் மதிப்பெண் கணக்கீட்டுக்கு சேர்க்கப்படும்.

சில முக்கிய காரணங்களுக்காக, ஒரு மதிப்பீடு சாத்தியம் இல்லை என்றால், அது தவிர்க்கப்படும்.

ஒரு பாடத்தில் அடைந்த முழு திறமையும் 6 முதல் 1 வரையுள்ள மதிப்பெண்களால் தரப்படுத்தப்படும். இந்த மதிப்பெண்கள் முதலாம் மற்றும் இரண்டாம் தவணையில் ஒரு மாணவர் அடைந்த திறைமையை வெளிப்படுத்தும். ஒரு மதிப்பெண் சான்றிதழ் ஆசிரியரின் தொழில்சார்ந்த தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டது. அது மாணவரின் எழுத்து மூல பரீட்சையில் கிடைத்த சராசரி மதிப்பெண் இல்லை. ஆசிரியரின் கணிப்பீட்டில் உதாரணமாக மாணவரின் பேச்சுத்திறன், வாய்வழி மற்றும் எழுத்துமூல பரீட்சைகளின் பெறுபேறுகள், மாணவரின் ஆக்கங்கள், விரிவுரைகள் ஆகியவை ஆசிரியரின் மதிப்பெண் தீர்மானத்துக்கு பயன்படுத்தப்படும்.

சான்றிதழின் தரவுகள் பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றன:

| மதிப்பெண் | 6 | 5 | 4 | 3 | 2 [மற்றும்] 1 |
|---|---|---|---|---|---|
| | மிக சிறப்பான தேர்ச்சி<br>Sehr gut | சிறப்பான தேர்ச்சி<br>gut | போதுமான தேர்ச்சி<br>genügend | தேர்ச்சி இல்லை<br>ungenügend | மிகவும் குறைந்த நிலைமை<br>(sehr) schwach |
| விளக்கங்கள் | [மாணவர் அல்லது மாணவி ...] | | | | |
| பாடத்திட்டத்தின் இலக்கை அடைந்த நிலைமை | பாடத்தின் மிக கடினமான இலக்குகளையும் வெற்றிகரமாக அடைகிறார் | பாடத்தின் இலக்குகளையும் சில கடினமான இலக்குகளையும் சரியாக அடைகிறார் | பாடத் தின் அடிப்படை இலக்குகளை அடைகிறார். | பாடத் தின் அடிப்படை இலக்குகளில் சில வற்றை இன்னும் அடையவில்லை . | பாடத் தின் அடிப்படை இலக்குளில் பலவற்றை இன்னும் அடையவில்லை |
| வேலைகளை சரியாக செய்வது | கடினமான வேலைகளையும் சிறப்பாக செய்கிறார் | சில கடினமான வேலைகளையும் சரியாக செய்கிறார் | அடிப்படை வேலைகளை சரியாக செய்கிறார் | அடிப்படை வேலைகளை தேவைப்பட்ட அளவில் சரியாக செய்வதில்லை | அடிப்படை வேலைகள் அனைத்தும் சரியாக செய்வதில்லை |

பின்வரும் அம்சங்கள் மதிப்பெண் தீர்மானத்துக்கு சேர்க்கப்படுவதில்லை: உதாரணமாக ஊக்கமற்ற நிலைமை, வகுப்பறையில் பாடத்தில் அக்கறையின்மை, கவனக் குறைவு,

கவனமாக படிப்பது, ஊக்கமாக செய்ல்படுவது. ஆனால் மேல் குறிப்பிடப்பட்ட மாணவர்களின் செயல்பாடுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பான விடயங்கள் தேர்வு அறிக்கையின் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

சான்றிதழ்கள் அனைத்தும் வகுப்பு ஆசிரியரால் பாதுகாப்பாக பராமரிக்கப்படும். அனைத்து சான்றிதழ்களும் ஆரம்பப் பள்ளியின் முடிவில் அல்லது பாடசாலை மாற்றத்தின் போது மாணவர்களிடம் கையளிக்கப்படும்.

கற்றல் மதிப்பீடு மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பான மதிப்பீடுகள் நான்கு பிரிவுகளில் கணிக்கப்படும். இடது புறத்திலிருந்து இரண்டாவது நெடுவரிசையில் (gut) உள்ள கணிப்புகளுக்கு அமைய வழமையாக வழங்கப்படும்.

பள்ளிக்கல்வி, மதிப்பீடு, சான்றிதழ்கள் மற்றும் கண்காணிப்புகள் பற்றிய கூடுதல் தகவல்களை பின்வரும் இணையப்பதிவில் காணலாம்: www.volksschulamt.zh.ch > Schulbetrieb & Unterricht>zeugnisse & Absenzen